# மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலம் மற்றும் பராமரிப்பு சட்டம் 2007

## முன்னுரை

மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோர் நலம் மற்றும் பராமரிப்பு சட்டம் 2007 ஆனது மூத்த குடிமக்கள் மற்றும் பெற்றோருக்கு உண்டான ஜீவனாம்சம் மற்றும் அவர்களது நலம் பற்றிய விரிவான மற்றும் குறித்த வகை பரிகாரத்தை வழங்கக்கூடிய சட்டமாகும். இந்த சட்டமானது பெற்றோர் பிள்ளைகள் என்ற உறவினையும் தாண்டி செயல்படுத்தக் கூடிய வகையிலான மிகவும் பரந்த நோக்கம் கொண்ட சட்டமாகும். மூத்த குடிமக்களுக்கு கிடைக்க வேண்டிய நலத்திட்ட உதவிகளை அவர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை ஆகும்.

பிரிவு 4 (1) மூத்த குடிமக்களின் சொத்துக்களை அடைய இருக்கும் வாரிசுதாரர்களிடம் இருந்து மூத்த குடிமக்கள் ஜீவனாம்சம் கோரலாம்.

பிரிவு 5 (1) ஜீவனாம்சம் கோரி மூத்த குடிமக்களோ அல்லது பெற்றோரோ அல்லது அவர்களால் அங்கீகராக்கப்பட்ட நிறுவனமோ விண்ணப்பம் அளிக்கலாம் அல்லது தீர்ப்பாயமே தானாக முன்வந்து நடவடிக்கை எடுக்கலாம்.

பிரிவு 5(4) இந்த சட்டப்பிரிவின் படி எதிர்மனுதாரருக்கு அழைப்பானை சார்பாக 90 நாட்களுக்குள் ஜீவனாம்சம் மனு சம்பந்தமாக ஜீவனாம்சம் தீர்ப்பாயம் முடிவு கண்டுவிட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| பிரிவு 6 (1) | எந்த ஒரு மாவட்டத்தில் மூத்த குடிமக்கள் அல்லது பெற்றோர் வசித்து வருகிறார்களோ அந்த மாவட்டத்திலேயோ அல்லது பிள்ளைகள் அல்லது உறவினர்கள் வசித்து வரும் மாவட்டத்திலேயோ ஜீவனாம்சம் கோரி மூத்த குடிமக்களோ அல்லது பெற்றோரோ தங்கள் குழந்தைகளுக்கு எதிராகவோ அல்லது உறவினர்களுக்கு எதிராகவோ மனு தாக்கல் செய்யலாம். |
| பிரிவு 6(6) | ஒரு ஜீவனாம்ச மனுவை விசாரிப்பதற்கு முன்பு அந்த மனுவை ஒரு சமரச அதிகாரிக்கு அனுப்பி வைக்கலாம். அந்த சமரச அதிகாரி 30 நாட்களுக்குள் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். அதன்படி சுமூகமான தீர்வு ஏற்பட்டு விட்டால் அதன் அடிப்படையில் ஜீவனாம்சம் தீர்ப்பாயம் ஜீவனாம்சம் மனுவின் மீது முடிவு காண வேண்டும். |
| பிரிவு 7 | ஜீவனாம்சம் மனுக்களை துரிதமாக விசாரித்து முடிக்க மற்றும் முடிவுக்கான இந்த சட்டப்பிரிவின்படி உட்கோட்ட அதிகாரி அல்லது உட்கோட்ட நடுவரின் தலைமையில் ஜீவனாம்ச தீர்ப்பாயம் உருவாக்கப்படும். |
| பிரிவு 15 | இந்த சட்டப்பிரிவானது ஜீவனாம்ச மேல்முறையீடு தீர்ப்பாயங்களை தோற்றுவிக்க வழிவகை செய்கிறது. |

| | |
|---|---|
| பிரிவு 16(6) | மேல்முறையீடு தீர்ப்பாயமானது தன்னிடம் பெறப்பட்ட மேல்முறையீட்டை பொறுத்து 30 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமான உத்தரவு பிறப்பிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என இந்த சட்டப்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. |
| பிரிவு 17 | இந்த சட்ட பிரிவானது ஜீவனாம்சம் தீர்ப்பாயத்திலோ அல்லது ஜீவனாம்ச மேல்முறையீடு தீர்ப்பாயத்திலோ ஜீவனாம்ச மனுக்களின் விசாரணையில் வழக்கறிஞர்கள் யாதொரு தரப்பினரையும் சார்ந்து ஆஜராவதை தடுக்கிறது. இதன் காரணமாக சம்பந்தப்பட்ட தரப்பினர் நேரடியாக விசாரணையில் கலந்து கொள்ள ஏதுவாகிறது. |
| பிரிவு 23 | இந்த சட்டம் இயற்றப்பட்ட பிறகு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு மூத்த குடிமக்களோ அல்லது பெற்றோரோ தமக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை தேவைகளை செய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு தம்முடைய சொத்தை தானமாகவோ அல்லது வேறு ஏதாவது ரூபத்திலோ கொடுத்திருந்து அவ்வாறு சொத்துரிமையைப் பெற்றவர் அந்த சொத்துரிமையை பெறுவதற்கு உரித்தான நிபந்தனையான மூத்த குடிமக்களுக்கு அல்லது பெற்றோருக்கு வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் அடிப்படை தேவைகளை செய்து கொடுக்க தவறும் பட்சத்தில் அவ்வாறாக மாற்றம் செய்யப்பட்ட சொத்துரிமையானது ஏமாற்றுதல் மூலமாகவோ அல்லது |

வற்புறுத்தல் மூலமாகவோ அல்லது அதீத அழுத்தம் காரணமாக ஏற்பட்ட சொத்துரிமை என்று கருதப்பட்டு அவ்வாறு சொத்துரிமை மாற்றி கொடுத்த நபரின் விருப்பத்திற்கு இணங்க அந்த சொத்துரிமை மாற்றத்தை இல்லா நிலை மாற்றமாக அறிவிக்க ஜீவனாம்ச தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் உண்டு.

பிரிவு 24 இந்த சட்ட பிரிவானது யார் ஒருவர் மூத்த குடிமக்களை கவனித்துக் கொள்ள மற்றும் பாதுகாத்து வர வேண்டிய நிலையில் இருந்து வருகிறாரோ, அவர் அந்த மூத்த குடிமக்களை முற்றிலுமாக கைவிட்டு விட வேண்டும் என்ற எண்ணத்தில் நிராகரிப்பு செய்துவிட்டு போகிறாரோ அத்தகைய நபருக்கு மூன்று மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூபாய் ஐந்தாயிரம் வரை அபராதம் அல்லது இவை இரண்டும் விதிக்கக்கூடிய வகையில் வழிவகை செய்கிறது.

பிரிவு 27 இந்த சட்டத்தின் கீழ் உள்ள சரத்துகளை பொறுத்து தலையிட எந்த ஒரு சிவில் நீதிமன்றத்திற்கும் யாதொரு அதிகாரமும் இல்லை. மேலும் இந்த சட்டம் சம்பந்தமாக செய்யப்படும் அல்லது செய்யப்படவுள்ள எந்த ஒரு செயலையும் தடை உத்தரவு மூலமாக நிறுத்த எந்த ஒரு சிவில் நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை.

*****

தொகுப்பு

ZARA LAW ASSOCIATES

A.K.A. ரஹ்மான், B.A.B.L., M.A., LLM., P.G.D.F.D.R.,

மாவட்ட நீதிபதி ( பணி ஓய்வு)

வழக்கறிஞர், மதராஸ் உயர் நீதிமன்றம்,

Cell: 96773 20907 Email: akarahmaan2025@gmail.com